

திருச்சி ரம்யாஸ் ஓட்டல் தென்றல் ரூப் கார்டன் ரெஸ்டாரன்டில் ஐ.பி.எல். டி.20 அதிரடி நேரடி உணவுத்திருவிழாவில் வாடிக்கையாளர்கள்.

# பொரிச்ச மீன் பொல்லார்டு, பிராவோ மட்டன் சுக்கா

தினமலர்

## ரம்யாசில் களைகட்டுது ஐபிஎல்

திருச்சி, மே 22-

நாடு முழுவதும் ஐ.பி.எல். கிரிக்கெட் ஜூரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், திருச்சி ரம்யாஸ் ஓட்டலில், ஐ.பி.எல்.,அதிரடி உணவு திருவிழாவும் களைகட்டி வருகிறது.

திருச்சி ரம்யாஸ் ஓட்டலின், தென்றல் ரூப் கார்டன் ரெஸ்டாரன்ட்டில் கடந்த இரு வாரங்களாக சக்கை போடு போட்டு வருகிறது இந்த ஐ.பி.எல். டி.20 அதிரடி நேரடி உணவுத் திருவிழா. கோடை விடுமுறை நாட்களின் மாலை நேரத்தையும், ஐ.பி.எல்., கிரிக்கெட் தொடரையும் ஒரே சேர அனுபவிக்கும் வகையில் தினமும் மாலை 6.30 மணி முதல் இரவு 11 மணி வரை இந்த உணவுத் திருவிழா நடைபெறுகிறது.

ரூப் கார்டனின் மையப்பகுதியில் மாதிரி கிரிக்கெட் பிட்ச், பிளக்ஸ் போர்டில் பிரமாண்ட கிரிக்கெட் மைதானம், கிரிக்கெட் பேட், பந்து வடிவங்களில் ஆங்காங்கே தலைக்கு மேல் தொங்கும் அலங்காரங்கள், திரும்பிய பக்கமெல்லாம் சச்சின், தோனி, டிராவிட் என கிரிக்கெட் நட்சத்திரங்களின் கார்ட்டூன்களுக்கு இடையில், மெல்லிய மின் விளக்குகளுக்கிடையே அகன்ற திரையில் ஒளிப்பரப்பாகிறது ஐ.பி.எல்.போட்டிகள். இதுகுறித்து ரம்யாஸ் ஓட்டலின் இயக்குனர் நித்யகுமார் கூறுகையில்,'' ஐ.பி.எல். போட்டியை பார்த்து ரசித்துக் கொண்டே, சாப்பிடும் வகையில், இந்த உணவுத் திருவிழாவிற்காக யாக்கர் மலிங்கா பிரான் வறுவல், காலிஸ் பிஷ் பிங்கர்ஸ், பிஷ் விராட் கோலி வடா, பொரிச்ச மீன் பொல்லார்டு, சதர்ன் பாலாஜி கிராப் செட்டிநாடு, இன் ஸ்விங் சிக்கன் பெப்பர் ரோஸ்ட், டான் சிங் பிராவோ மட்டன் சுக்கா, கவர் டிரைவ் கஸ்தூர் பிஷ் டிக்கா என்று ஐ.பி.எல்லில் கலக்கும் கிரிக்கெட் வீரர்களின் பெயரிலும், கிரிக்கெட் தொடர்பான நிகழ்வுகளின் பெயர்களிலும் சைவ, அசைவ உணவு வகைகள் தயாரித்து சூடாகவும், சுவையாகவும் பரிமாறுகிறோம்.

பரிமாறுபவர்களும் ஐ.பி.எல்.,அணிகளின் சீருடையில் வலம் வருவது கிரிக்கெட் மைதானத்தையே சாப்பிடுபவர்களுக்கு நினைவூட்டுகிறது. அதோடு மட்டுமில்லாமல், சென்னை சூப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன், ராயல் சேலஞ்சர்ஸ் என்று ஐ.பி.எல்.அணிகளின் பெயர்களில் பன்னீர் பிங்கர் சிப்ஸ், இண்டியன் பிரெட், சன்சைன் ரைஸ், பேபி கார்ன் ஜால் பிரெஸ்சி, கிரிஸ்பி வெஜிடெபிள்ஸ், பிரியாணி, சிக்கன் ரோஸ்ட், டிராகன் சிக்கன், தந்தூரி சிக்கன், சிக்கன் மலை டிக்கா, பிஷ் டிக்கா என்று பல்வேறு உணவு வகைகள் கொண்ட தனித்தனி உணவு செட்டுகளும் (காம்போ) வழங்கப்படுகிறது. இதில், எந்த அணியின் பெயரிலான உணவு தொகுப்பை வாடிக்கையாளர்கள் சாப்பிடுகிறார்களோ, அந்த அணியின் டி.ஷர்ட்டும் அவர்களுக்கு பரிசாக வழங்கப்படுகிறது. மேலும், நேரடியாக ஐ.பி.எல்.போட்டியை பார்ப்பது போன்றே, இங்குள்ள கிச்சன்களில் சைவ, அசைவ உணவு வகைகளை தயாரிப்பதையும் வாடிக்கையாளர்கள் நேரடியாக பார்க்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'', என்றார்.

தற்போதைய 'ஹாட்' ஹாபியான ஐ.பி.எல்.போட்டிகளை, கோடை காற்றோட்டமான சூழ்நிலையில் ரூப் கார்டனில் அகன்ற திரையில் பார்த்துக் கொண்டே, நமக்கு பிடித்த உணவு வகைகளையும் ஒரு கை பார்ப்பது திருச்சி மக்களுக்கு சற்று வித்தியாசமான அனுபவமாகத்தான் இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும் போது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிக்குப் போன்றே, வரும் 26ம்தேதி வரை நடைபெறும் இந்த ஐ.பி.எல்:,அதிரடி உணவுத் திருவிழாவிற்கும் ஒரு பெரிய விசில் போடலாம்.